# மாற்கு மலர்

(For Private Circulation only)

தென்னிந்தியத் திருச்சபை – சென்னை பேராயம்

## தூய மாற்கு ஆலயம்

கோவிந்தசாமி நகர், மடிப்பாக்கம், சென்னை - 600 091.

**website : www. csistmarks.com**

**ஜனவரி – 2017**

“நீரோ மாறாதவராயிருக்கிறீர். உமது ஆண்டுகள் முடிந்து போவதில்லை. உமது அடியாரின் பிள்ளைகள் தாபரிப்பார்கள். அவர்கள் சந்ததி உமக்கு முன்பாக நிலைபெற்றிருக்கும்.”

சங் 102:27,28




**புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

# மாற்கு மலர்

**மலர் - 6 இதழ் 9**

**நிர்வாகக்குழு**

Rev. Raja Freeman
Presbyter-in-charge.
94439 90888

Mr. S. Ambrose
Hon. Secretary
98408 66434

Mrs. Joan Daniel
Hon. Treasurer
98409 06796

Mr. V. George

Mr. S. Ponnuraj

Mrs. Nesarani Wilson

Dr. Elizabeth Hannah Prakash

Mr. Jim Raja

Mr. S.E.John Sunder
(Sexton)
86759 44559

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| 1. ஆயர் மடல் | 1 |
| 2. செயலர் செய்தி | 2 |
| 3. திருமறை வினா – விடைப் போட்டிகள் | 3 |
| 4. சென்ற மாத திருமறைவினா போட்டிகளுக்கான விடைகள் | 5 |
| 5. சென்ற மாத திருமறைவினா போட்டிகளுக்கான விடைகள் எழுதியவர்கள் | 7 |
| 6. பிறந்த நாள் வாழ்த்துக்கள் | 8 |
| 7. திருமண நாள் வாழ்த்துக்கள் | 9 |
| 8. உபவாச ஜெபக்கூட்டம் | 9 |
| 9. ஆராதனை ஒழுங்குகள் | 10 |

## வாக்குத்தத்தம்

"நான் உண்டுபண்ணின எல்லா ஜாதிகளைப் பார்க்கிலும், புகழ்ச்சியிலும், கீர்த்தியிலும் மகிமையிலும் உன்னைச் சிறந்திருக்கும்படி செய்வேன் என்றும், நான் சொன்னபடியே, நீ உன் தேவனாகிய கர்த்தரான எனக்குப் பரிசுத்த ஜனமாயிருப்பாய் என்றும், அவர் இன்று உனக்குச் சொல்லுகிறார்"

உபா 26:19

PRINTED BY : **SRI VALLIAMMAN PRINTERS**
Madipakkam Bus Terminus, Chennai - 600 091.
Cell : 9791079923, 9940115828
E-mail : srivalliammanprinters97@gmail.com

# ஆயர் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை மக்களே! புதிய ஆண்டின் கிருபைகளை நமக்கு பொழியும் இறைமகன் இயேசுவின் இனிய திருப்பெயரில் வாழ்த்துகிறேன்.

நம்முடைய முயற்சிகளை கர்த்தர் நிறைவேற்றினார் என்பதின் அடையாளமாக புதிய ஆலயம் நமக்கு கிடைத்திருக்கிறது. என்றென்றும் நன்றியுள்ள இருதயத்தோடு அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோமாக!
இயற்கை சீற்றத்திலும் குறிப்பாக வர்தா புயலில் சிக்கி வேலைகள் கெடாமல் பாதுகாத்து மற்றும் நமது நிகழ்வுகளை வெற்றியாக்கிய இறைவனுக்கு கோடான கோடி தோத்திரங்களை ஏறெடுப்போமாக. இந்த ஆலயத்திற்காக ஜெபித்த உற்சாகமுடன் தாராளமாககொடுத்த உங்கள் அனைவரையும் உங்கள் சந்ததிகளையும் அபரிமிதமாக ஆசீர்வதிப்பாராக.

அர்ப்பணிப்புடன் செயல்படும் மானிடரின் எண்ணங்களை கர்த்தர் நிறைவேற்றி மகிழ்விப்பார் என்பதற்கு நமது ஆலயம் சாட்சியாக உள்ளது. நமது சந்ததிகள் இதைக் கொண்டாடி மகிழ்வார்கள். குறிப்பாக எனது ஆலோசனைகளை ஏற்று ஆலயத்தை அழகுடன் முடிக்க ஒவ்வொரு கட்டுமானப்பணி காரியத்திலும் கவனத்துடன் செயல்பட்டு முடித்த திரு.டெல்பின் அவர்களுக்கும் அவரின் குழுவினருக்கும் மனமார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த கிறிஸ்மஸ் நாட்களிலும், புத்தாண்டு தினத்திலும் மற்றும் நமது ஆலய இறையொப்படைப்பு நிகழ்விலும் உற்சாகமாக உழைத்த அனைவரையும் வாழ்த்துகிறேன். தொடர்ந்து உபவாச ஜெபம் நடத்தி ஜெபத்தினாலே வெற்றி பெறச் செய்த திரு. பீட்டர் பிரகாஷ் அவர்களுக்கும் தவறாமல் பங்கேற்ற சகோதர சகோதரிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்து ஐக்கிய சங்கங்களின் அங்கத்தினருக்கும் அயராது செயல்பட்ட பெண்கள் ஐக்கிய சங்கத்தினரை வழிநடத்திய திருமதி. நேசராணி வில்சன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா நிகழ்வுகளும் இனிதே நடைபெற என்னுடன் உதவியாக இருந்த செயலர், பொருளர், ஆலோசனை குழுவினர் மற்றும் கட்டிடக்குழு அங்கத்தினர், ஆலயப் பணியாளர் குடும்பம் அனைவருக்கும் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது ஆலயத்தில் நிறைவேற்ற வேண்டிய பணிகள் இன்னும் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். இன்னும் உற்சாகத்துடன் தேவைகளை சந்தித்து நிறைவு செய்ய உதவ வேண்டுகிறேன்.

கர்த்தர் உங்களைப் பாதுகாப்பாராக. ஆமென்

இறைப்பணியில் உங்கள் ஆயர் **அருள்திரு. ஜா. ராஜா ஃப்ரீமேன்**

## செயலர் செய்தி

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் திருச்சபையார் அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்.

நமதாண்டவர் இயேசு தாமே கடந்த 2016ம் ஆண்டு துவக்கம் முதல் முடிவு மட்டும் நமக்கு நல்ல துணைவராக, பாதுகாவலராக, ஆலோசனை கர்த்தராக இருந்து நம்மை பாதுகாத்து, புதுபுது நன்மைகளால் நிறைத்து 2016-ஆம் ஆண்டை முடிக்கும்படியாக கிருபையளித்து நம்மை வழி நடத்தி வந்திருக்கிறார். அவருக்கே சகல துதி கனம் மகிமை அனைத்தும் இன்றும் என்றுமான சதாகாலங்களிலும் உண்டாவதாக.

2016ஆம் ஆண்டு முடிவில் நம்முடைய புதிய ஆலயத்தை இறை ஒப்படைப்பு செய்ய நமக்கு கிருபையளித்து வழி நடத்தி வந்த சர்வவல்லவராகிய தேவாதி தேவனுக்கு துதி தோத்திரங்களை ஏறெடுப்போம். ஆலய கட்டுமானத்தில் அவ்வப்போது பல தடங்கல்கள், பொருளாதார நெருக்கடிகள் வந்த போதிலும் ஆண்டவர் முன்னின்று நடத்தி நமக்கு உதவியளித்து 15.12.2016 அன்று இறைஒப்படைப்பு செய்ய கிருபையளித்திருக்கிறார் அது ஆண்டவருடைய சுத்த கிருபையே.

நாம் ஆலயத்தை இறை ஒப்படைப்பு செய்து 18.12.2016 முதல் புதிய ஆலயத்தில் ஆராதனை நடத்தவும், ஆண்டவர் உதவியளித்திருக்கிறார். ஆனாலும் ஆலயத்தில் முடிக்க வேண்டிய வேலைகள் அனேகமிருக்கின்றது. ஆகையினால் திருச்சபையார் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி மீதமுள்ள வேலைகளையும் சீக்கிரத்தில் நிறைவேற்றி முடிக்க உதவும்படி வேண்டிக் கொள்கிறேன்.

நாம் சிறுகூட்டமாயிருந்தும் இப்படிப்பட்ட ஒரு ஆலயத்தை கட்டி எழுப்ப ஆண்டவர் உதவியிருக்கிறார் என்றால் அதற்கு முக்கிய காரணம் திருச்சபையாராகிய நம் அனைவரின் ஊக்கமான ஜெபம், உதாரத்துவமான ஈகை குணம், அனேகரை சந்தித்து உதவிகளை பெற்று தந்து உதவியதுமே. மேலும் நாம் இப்படிப்பட்ட உற்சாகத்தோடு உழைத்தால் ஆண்டவர் முன்னின்று நம்மை ஊக்குவித்து ஆலய வேலைப்பாடுகள் அனைத்தையும் சீக்கிரத்தில் செய்து முடிக்க நமக்கு உதவியளிப்பார் என்பதற்கு எந்த சந்தேகமுமில்லை.

மேலும் 2017ம் ஆண்டு முழுவதும் கர்த்தர் நமக்கு நல்ல மேய்ப்பராக, நல்ல வழிகாட்டியாக நம்மோடிருந்து எல்லா தீங்குக்கும் நம்மை விலக்கி பாதுகாத்து, புது புது நன்மைகளைக் காண செய்து, நம்முடைய விண்ணப்பங்களுக்கெல்லாம் பதில் தந்து தம்முடைய வல்லகரங்களால் நம்மை அரவணைத்து, பாதுகாத்து வழி நடத்துவாராக.

2017ம் ஆண்டு நம் அனைவருக்கும் மிகவும் ஆசீர்வாதமான ஆண்டாயிருக்க சர்வ வல்ல தேவன் தாமே அருள்புரிவாராக.

ஆமென்.

*S. AMBROSE*



## திருமறை வினா விடைப் போட்டிகள்

1. அனைத்து விடைகளையும் **முழு நீள தாளில்** திருமறைக் குறிப்புகளோடு எழுத வேண்டும்
2. 12 மாதங்களும் பதில் எழுதுகிறவர்களுக்கு ஆண்டு இறுதியில் பரிசுகள் வழங்கப்படும்.
3. விடைகள் அனுப்ப வேண்டிய இறுதி நாள் இம்மாதம் 15-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை.

### A. பொது - 6:9

**(சகரியா – மல்கியா)**


1. யார்? யார்மீது எழுபது வருஷம் கோபமாய் இருந்தார்?
2. அழுக்கு வஸ்திரம் தரித்தவன் யார்?
3. எதை பூமிக்கும், வானத்துக்கும் நடுவாய் தூக்கி கொண்டு போனார்கள்?
4. யாருக்கு தீங்கு நினையாமல் இருங்கள் என்று கர்த்தர் உரைக்கிறார்?
5. சத்திய நகரம் எது?
6. எங்கே அடைபட்டிருக்கிறவர்களை எதினால் விடுதலைப் பண்ணப்படும்?
7. பொய்யைத் தரித்தவர்கள் யார்?
8. அசீரியா எகிப்து இவைகளுக்கு என்ன நடக்கும்?
9. லீபனோனின் வாசல் ஏன் திறக்க வேண்டும்?
10. இரண்டு கோல்களுக்கு என்ன பெயரிடப்பட்டது?
11. யாருக்கு குருட்டாட்டத்தை உண்டுபண்ணுவார்?
12. குதிரைகளின் மணிகளில் என்ன எழுதப்பட்டிருக்கும்?
13. சத்திய வேதம் யாருடைய வாயில் இருந்தது?
14. யார் நிர்மூலமாகவில்லை?
15. கர்த்தருடைய பெரிதும் பயங்கரமான நாள் வருமுன்னே யாரை கர்த்தர் அனுப்புவார்?

### B. Kids Crossword Puzzle - 6:9

**(Deuteronomy Chapters 11-20)**

**Top To Bottom**

1. On which mountain did the Israelites have to proclaim the blessings when they enter the promised land? (7)
2. Do not neglect the ————————((7) living in your towns, for they have no allotment or inheritance of their own.




**Bottom To Top**

3. Where did the assembly of Israel say " Let us not hear the voice of the Lord our God nor see the great fire anymore, or we will die."(5)

**Left To Right**

4. Who has to write for himself on a scroll a copy of the law taken from Levitical priest? (4)
5. How many times do the men of Israel appear before the Lord ? (5)
6. On which month the pass over is to be celebrated? (4)
7. How many cities have been set aside as refugee cities? (5)
8. ———————— (7) year is the year for cancelling debts.
9. How many nations did the Lord ask the Israelites to completely destroy? (3)
10. You must not eat the ——————(5) : pour it on the ground like water.

## C. வாலிபர் வேதஅறிவுப் போட்டி – 6:9

(வேதப்பகுதி : உபாகமம் : 11–15)

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. பூமி தன் வாயைத் திறந்து யாரை விழுங்கியது?
   i) நாதாப், அபியூ ii) மிரியாம், ஆரோன் iii) தாத்தான், அபிராம்
2. நீ உன் தேசத்திலிருக்கும் நாளெல்லாம் யாரைக் கைவிடாதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்?
   i) லேவியனை ii) அந்நியனை iii) எளியவனை



3. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் நாம் புசிக்கத் தகுந்த மிருகம் எது?
   i) முயல் ii) மான் iii) ஒட்டகம்
4. நீ அநேகம் ஜாதிகளை ............................
   i) ஆளுவாய் ii) மேற்கொள்வாய் iii) சேவிப்பாய்
5. உன் ஆடுமாடுகளில் எதை உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமாகக் கடவாய்?
   i) தலையீற்றாகிய பெண் ii) நொண்டியானதை iii) தலையீற்றாகிய ஆண்
6. எந்த மலையின்மேல் ஆசீர்வாதத்தைக் கூற வேண்டும்?
   i) கெரிசீம் ii) ஏபால் iii) மோரியா
7. எதை சாப்பிடாமல் தண்ணீரைப் போல் தரையிலே ஊற்றிவிட வேண்டும்?
   i) எண்ணெய் ii) இரத்தம் iii) மதுபானம்
8. ..................... பொருளில் ஒன்றும் உன் கையில் இருக்க வேண்டாம்
   i) கொள்ளையடிக்கப்பட்ட ii) சுட்டெரிக்கப்பட்ட iii) சபிக்கப்பட்ட
9. எந்த வருஷத்தின் முடிவிலே தசமபாகத்தைப் பிரித்து அதை நம் வாசல்களில் வைக்க வேண்டும்?
   i) 7 ii) 3 iii) 50
10. எந்த வருஷத்தின் முடிவிலே விடுதலை பண்ண வேண்டும்?
   i) 3 ii) 5 iii) 7

**தொகுத்து வழங்கியவர்கள் :**

**A. பொது – திருமதி. பியூலா ஃப்ரீமேன்**

**B. KIDS – திருமதி. நளினி நிக்சன்**

**C. வாலிபர் பகுதி – திருமதி. பியூலா ஜிம்**

## சென்ற மாத (டிசம்பர் 2016) திருமறை வினா விடைப் போட்டிகளுக்கான விடைகள்

## A. பொது – 6:8

1. யோனா தான் பிரயாசப்பட்டு வளர்க்காத ஆமணக்குச் செடிக்காக பரிதபித்தார் (யோனா 4:10)
2. யோனா (யோனா 1:9)
3. எருசலேமின் வாசல் வரை கர்த்தரின் தீமை வந்தது. (மீகா 1:12)
4. ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசிக்கிறார்கள் (மீகா 3:11)
5. சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். (மீகா 4:2)

6. எப்பிராத்தா (மீகா 5:2)
7. நினிவே (நாகூம் 2:8)
8. துன்மார்க்கன் நீதிமானை வளைந்து கொள்கிறான். ஆதலால் நியாயம் புரட்டப்படுகிறது. (ஆபகூக் 1:4)
9. பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். (ஆபகூக் 2:14)
10. ஆபகூக் தீர்க்கதரிசி சிகாயோனில் பாடின விண்ணப்பம் (ஆபகூக் 3:19)
11. சமுத்திரக்கரை தேசம் (செப்பனியா 2:6)
12. மோவாப் சோதோமைப் போலும், அம்மோன் கொமோராவைப் போலும் ஆகும். (செப்பனியா 2:7)
13. ஆகாய் கர்த்தரின் வார்த்தையின்படி ஜனங்களிடம் கூறியது. (ஆகாய் 1:13)
14. ஆலயத்தின் மகிமை (ஆகாய் 2:9)
15. செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல் (ஆகாய் 2:23)

## B. KIDS CROSSWORD PUZZLE - 6:8

**( Deuteronomy Chapters 1-10 )**

**Left to Right**

1.Jotbathah (10:7)
2. Esau (2:5)
3. Pharaoh (6:22)
4. Seven (7:1)

**Top to Bottom**

1.Jephunneh (1:36)
5.Horeb (5:2)
6. Aaron (9:20)
7. Ramoth (4:43)
8. Bread (8:9)
9. Hermon (3:9)

## C. வாலிபர் வேத அறிவு போட்டி - 6:8

(வேதப்பகுதி : உபாகமம் 6-10)

**விடைகள் :**

1. மாசா (6:16)
2. பரிசுத்த (7:6)
3. தேன் (8:8)
4. ஓரேப் (9:8)
5. பட்சபாதம் (10:17)
6. நிர்மூலமாக்கக்கடவாய் (7:16)
7. சாமர்த்தியமும் (8:17)
8. கன்றுக்குட்டியை (9:16)
9. லேவி (10:8)
10. சீத்திம் (10:3)



**சென்ற மாத (டிசம்பர் 2016) திருமறை வினா விடைப் போட்டிகளுக்கு விடை எழுதியவர்களை சபையின் சார்பாக வாழ்த்துகிறோம். (மதிப்பெண்கள் அடிப்படையில் பெயர்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது)**

## A. பொது - 6:8

| S.No. | Name | Marks | S.No. | Name | Marks |
|---|---|---|---|---|---|
| 1. | Caroline Henry | 15 | 13. | Ruby | 15 |
| 2. | Esther J | 15 | 14. | Sheela Willson | 15 |
| 3. | Hepsie Melba | 15 | 15. | Sweetbud Judston | 15 |
| 4. | Jaya John | 15 | 16. | Sweety Vincent | 15 |
| 5. | Jayakumari | 15 | 17. | Thangaleela | 15 |
| 6. | Johanna Daniel | 15 | 18. | Victoria Aruldass | 15 |
| 7. | Juliet Johnson | 15 | 19. | Augusti Sudhakaran | 14 |
| 8. | Mahi Suhila | 15 | 20. | Christy Indira | 14 |
| 9. | Mercy James | 15 | 21. | Felicia Willson | 13 |
| 10. | Nalini Nixon | 15 | | | |
| 11. | Ranjitha | 15 | | | |
| 12. | Roseline Robertson | 15 | | | |

## B. KIDS - 6:8

| S.No. | Name | Marks | S.No. | Name | Marks |
|---|---|---|---|---|---|
| 1. | Ajay Rohith | 10 | 7. | Persis Tafflin | 10 |
| 2. | R. Bettina Magdalene | 10 | 8. | Praveen | 10 |
| 3. | Geolin | 10 | 9. | Sherin Victoria | 10 |
| 4. | Harily Nitika | 10 | | | |
| 5. | Jithin | 10 | | | |
| 6. | Johanna Lisalin | 10 | | | |

## C. YOUTH - 6:8

| S.No. | Name | Marks | S.No. | Name | Marks |
|---|---|---|---|---|---|
| 1. | Belinda Smith | 10 | | | |
| 2. | S.Eliza Femi Sherley | 10 | | | |
| 3. | Mahi Suhila | 10 | | | |
| | | | | | |

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

"நான் உன் நடுவே கடந்து போவேன்" ஆமோஸ் 5:17

Jan 2 - Mrs. Gladys Devadoss
Jan 3 - Mrs. D. Rejitha Delphin
Jan 4 - Baby Jeno Caralin D/o. Mr. Eliza Rajkumar
Mr. Rajendran Samuel
Mrs. Thilaka Jackson
Jan 5 - Mrs. Jeyaseeli
Jan 6 - Mr. E.S. John Epiphanes
Jan 9 - Mrs. J. Sheela Benjamin
Jan 11 - Mrs. T. Jebarani Karunakaran
Miss. J. Shoba Mini Barathi D/o. Mr. I. Joshua
Jan 13 - Mr. C. John Griffin S/o. Mr. Charles
Baby Jeshlin D/o. Mr. Josephin Grant
Jan 14 - Mrs. Hepsie Melba
Jan 17 - Baby Charlene Esther Rhasmika
D/o. Mr. Deinish Arul Roy
Jan 18 - Master I. Dallwin S/o. Mr. I. Isayah
Jan 19 - Miss J. Divya Shalini D/o. Mr. I. Joshva
Mrs. Malini Ajoo
Jan 20 - Master Obadiah Samuel GS/o. Rev. Stephen Ajoo
Mrs. Deepa Joshua
Jan 21 - Mr. G. Andrew Jebadurai
S/o. Mr. Gnana Basker Koilraj
Jan 23 - Mr. Newton Premkumar
Jan 24 - Mr. S.T. Suresh Kumar S/o. Mr. N. Selvakumar
Jan 25 - Mr. S. Arun S/o. Mr. K. Senthil Kumar
Jan 26 - Mr. S. Ebenezer Karunakaran
Mrs. J. Mary Sofia Jeyasekaran



Jan 27 - Miss. C. Florence Priyashanthini
D/o. Mr. G.S.S. Chella Kumar
Mrs. Reginal Dason
Jan 28 - Baby Stephie Priscilla D/o. Mr. S.D. Suresh Babu
Jan 29 - Mrs. T. Christy Jeya
Jan 31 - Mrs. Nesarani Wilson
Mr. Sunil Franklin S/o. Mrs. Victoria Arul Doss

## திருமணநாள் வாழ்த்துக்கள்

"செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும்" சங் 112:2

Jan 4 - Mrs. Helen Leeba & Mr. Sunil Franklin
Jan 10 - Mrs. Hepzie Melba & Mr. Gnanabaskar Koilraj
Jan 15 - Mrs. Sweetbud & Mr. J.D. Judston
Jan 16 - Mrs. Silvy Joy & Mr. S. Ambrose
Jan 17 - Mrs. Thanga Leela & Mr. N. Selvakumar
Jan 18 - Mrs. Helen & Mr. D. Albert
Jan 25 - Mrs. G. Beulah & Mr. John Ephiphanes
Mrs. Priya Shantha Kumar & Mr. Jeevanayagam
Jan 28 - Mrs. Christy Jeya & Mr. S. Thangaraj

### உபவாச ஜெபக் கூட்டம்

நமது ஆலயத்தின் மாதாந்திர உபவாச ஜெபக்கூட்டம் இம்மாதம் வழக்கம்போல் 2ம் சனிக்கிழமை (14.01.2017) அன்று காலை 10.00 மணி முதல் நமது ஆலயத்தில் நடைபெறும்.

கடந்த மாதம் 15ம் தேதி நமது புதிய ஆலயம் இறை ஒப்படைப்பு செய்ய கிருபை அருளிய கர்த்தருக்கு நமது நன்றிகளை ஏறெடுக்கவும், புதிய ஆலயத்தில் மீதமுள்ள பணிகள் விரைவில் முடிவடையவும், இந்த உபவாச ஜெபக்கூட்டத்தில் சபை மக்கள் அனைவரும் கலந்து கொண்டு ஒருமனப்பட்டு ஜெபிக்கவும் அன்புடன் அழைக்கிறோம்.

**C.S.I** தூய மாற்கு ஆலயம்

## ஆராதனை ஒழுங்குகள் (ஜனவரி 2017)

| நாள் | நேரம் | வழிபாடு | செம்பொருள் | வேதபகுதி | நடத்துனர் / செய்தியாளர் |
|---|---|---|---|---|---|
| 08.01.2017<br>ஞாயிறு | 8.30 a.m<br><br>6.00 p.m | **திருவிருந்து**<br><br>மாலை வழிபாடு | Honoring the Body as Temple of God<br>சரீரத்தை கடவுளின் ஆலயமாகப் பேணுதல் | பிரசங்கி 6:1-12<br>1 கொரி 3:16-23<br>மத்தேயு 5:21-30 | அருள்திரு.**J. ராஜா ஃப்ரீமேன்**<br><br>பெண்கள் ஐக்கிய சங்கம் /<br>திருமதி. **பியூலா ஃப்ரீமேன்** |
| 14.01.2017<br>சனி | 10.00 a.m | உபவாச ஜெபக்கூட்டம் | | | அருள்திரு.**J. ராஜா ஃப்ரீமேன்**<br>திரு. **பீட்டர் பிரகாஷ்** |
| 15.01.2017<br>ஞாயிறு | 8.30 a.m<br><br>6.00 p.m | காலை வழிபாடு<br><br>மாலை வழிபாடு | Called to Unity<br><br>ஒருமித்திருக்க அழைப்பு | எசே 37:15-23<br>எபே 4:1-6<br>யோவான் 15:1-12 | திரு. **அம்புரோஸ் /**<br>**Dr. தயாளன்**<br>ஞாயிறு பள்ளி /<br>திருமதி. **ஹேனா பீட்டர்** |
| 22.01.2017<br>ஞாயிறு | 8.30 a.m<br><br>6.00 p.m | **திருவிருந்து**<br><br>மாலை வழிபாடு | Unity in Faith and Action<br><br>பற்றுறுதியிலும் செயலிலும் ஒருமித்திருத்தல் | யோசுவா 3:9-17<br>அப்போ 9:20-25<br>மாற்கு 1:21-34 | அருள்திரு.**J. ராஜா ஃப்ரீமேன்**<br><br>வாலிபர் ஐக்கிய சங்கம் /<br>திருமதி. **ஜோன் டேனியல்** |
| 29.01.2017<br>ஞாயிறு | 8.30 a.m<br><br>6.00 p.m | காலை வழிபாடு<br><br>பாடல் வழிபாடு | True Piety<br><br>உண்மை பக்தி | மீகா 6:1-8<br>யாக்கோபு 1:19-27<br>மத்தேயு 6:1-8 | திரு. **அம்புரோஸ் /**<br>சகோ. DGP. **கிளாரன்ஸ்**<br><br>பாடகர் குழு<br>திரு. **J.ஜெயசீலன்** |